Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 30, 2023

செவ்வாய்க்கிழமை மே 30, 2023 | ஒளி: 09 கதிர்: 007 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு ★ | FREE

கொழும்பில் ஏலக்காய் திருட்டு

கொழும்பு துறைமுக வளாகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த கொள்கலனை உடைத்து அதிலிருந்த ஏலக்காய் பெட்டிகள் ஒன்பதை திருடினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

இலங்கையில் உணவு பாதுகாப்பு முன்னேற்றம்

இலங்கையில் உணவுப் பாதுகாப்பு அனைத்து மாகாணங்களிலும் முன்னேறி வருவதாகவும் 3.9 மில்லியன் மக்கள் அல்லது மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் மிதமான கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் இணைந்து மேற்கொண்ட பயிர் மற்றும் உணவு பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையிவேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மற்றும் ஜூலையில் 60 ஆயிரம் பேர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்ததுடன்,

தொடர்ச்சி P2

எதிர்வரும் வாரங்களில்

பல பொருட்களின் விலைகள் குறையும்

843 பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாட்டுத் தளர்வை, இலங்கை மத்திய வங்கி அறிவித்ததை அடுத்து அலைபேசிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள், பழங்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனிநபர்கள் கடன் கடிதத்தை திறக்கும் போது 100 சதவீத பணத்தை வைப்பிலிட வேண்டும் என்ற விதிமுறையை இரத்து செய்ய மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

சீர்திருத்தங்களை மேற்கொள்ள

இலங்கை தொடர்ந்தும் உறுதியாக இருக்கும்

நிலையான கடன் பாதைக்கு திரும்புவதற்கு தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் இலங்கை உறுதியாக இருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

மத நல்லிணகத்தை சீர்குலைக்கும்

குழுக்களை விசாரிக்க விசேட பொலிஸ் பிரிவு

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் குழுக்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவை நிறுவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

தொடர்ச்சி P2

வெப்ப சுட்டெண் எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வு

அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை



வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் வெப்பச் சுட்டெண் எச்சரிக்கை மட்டத்துக்கு அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

ஈரப்பதன் மற்றும் அதிகபட்ச வெப்பநிலையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும் வெப்ப சுட்டெண், அதிகபட்ச வெப்பநிலை அல்ல என்பதுடன், மனித உடலில் உணரப்படும் நிலை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

பலவீனமடையவில்லை; பலமடைந்துள்ளது

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவோடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலவீனமடைந்து விட்டது என்று சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர் என்றும் காங்கிரஸ் இன்னமும் பலமாகவே உள்ளது என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில், தலவாக்கலை உப பிரதேச செயலகம், நோர்வூட் உப பிரதேச செயலகம் என்பன பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் புதிய பிரதேச செயலகங்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் திங்கட்கிழமை (29) நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய அமைச்சர், இதற்கு எமது தற்போதைய அரசியல் வகிபாகமே சிறந்த சான்று என்று தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள்

ஜூன் 1 முதல் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போதும், கடவுச்சீட்டைப் புதுப்பிக்கும்போதும் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்க முடியும் என சர்வதேச உறவுகள் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச உறவுகள் குறித்த துறைசார் மேற்பார்வைக்குழு கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

தங்கமும் டொலரும் கணிசமாக சரிவு

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளதுடன், தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் விலை உள்ளூர் சந்தையில் மீண்டும் வெகுவாக குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் திங்கட்கிழமை (29) காலை வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 289 ரூபாய் 89 சதமாகவும் விற்பனை விலை 303 ரூபாய் 26 சதமாகவும் பதிவாகியுள்ளது.

மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட நடுத்தர மாற்று வீதம் 299 ரூபாய் 11 சதமாகப் பதிவாகியுள்ள நிலையில், கடந்த மே மாதம் 18ஆம் திகதியன்று டொலரின் கொள்வனவு விலை 300 ரூபாயை விட குறைவடைந்ததுடன், 13 மாதங்களின் பின்னர் 300 ரூபாயை விட குறைந்திருந்தது.

தொடர்ச்சி P2

இன, மத வெறுப்பை கக்கி வரும்

பௌத்த தேரர்களை நோக்கியும் சட்டம் பாய வேண்டும்

இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குகளை நோக்கியும் இதே சட்டம், ஒழுங்கு, நீதி துறை பாய வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் சமூக பேச்சாளர் நதாஷா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக அரசாங்கத்தின் சட்டம், ஒழுங்கு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னேடுக்கப்படுகின்றன. சட்டம், ஒழுங்கு, நீதி துறை தன் கடமையை செய்யட்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு மத தலைவரும், செயற்பாட்டாளரும், தமது இனவாத, மதவாத நடவடிக்கைள் தொடர்பில் இனிமேல் சட்டத்தின் முன் விலக்கு பெற கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

350 பில். டொலர் வழங்குகிறது ஆசிய அபிவிருத்தி வங்கி

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஆதரவை வழங்குவதற்கான 350 மில்லியன் அமெரிக்க டொலர் விசேட கொள்கை அடிப்படையிலான கடனுதவிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியால் தொகுக்கப்பட்ட நிதி உதவியின் பரந்த தொகுப்பின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் உள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கையில் தெரிவித்துள்ளது,

இது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், பொருளாதார மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள் மற்றும் வெளி சமத்துவமின்மைக்கான காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் நிலையான கடன் பாதைக்கு திரும்புவதற்கும் இலங்கை துணிச்சலான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய

ஸ்டாலின் உள்ளிட்ட 32 பேருக்கு ஜூலை 01ஆம் திகதி விசாரணை

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பத்தரமுல்லையில் ஆர்ப்பாட்டம் நடத்திய விவகாரம் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 32 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட படப்ட வழக்கு விசாரணைக்கான தினமாக ஜூலை 1ஆம் திகதியை கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன ராஜகருணா, திங்கட்கிழமை (29) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

மத நல்லிணக்க விவகாரம்: தேரருக்கு விளக்கமறியல்

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்ட இராஜாங்கனை சத்தாரத்ன தேரரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, திங்கட்கிழமை (29) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

மத சுதந்திரம் குறித்து சட்டமூலம் வருகிறது

மத சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். மதங்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிடுபவர்கள் குறித்து பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

மாடுகளுக்கு பெரியம்மை: வடமேல் மாகாணத்தில் தடை

வடமேல் மாகாணத்தில் மாடுகளுக்கு வேகமாக பரவி வரும் வைரஸ் காரணமாக மாகாணத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மாடுகளை கொண்டு செல்வதை முற்றாக தடை செய்வதற்கு வடமேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள புண்ணை நீராவி கிராம அலுவலர் பிரிவில் கால்நடைகளுக்கு பெரியம்மை நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

இலங்கையில் உணவு பாதுகாப்பு முன்னேற்றம்

அந்த எண்ணிக்கை 10 ஆயிரமாக 40 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

சிறந்த உணவு நுகர்வில் இருந்து உணவுப் பாதுகாப்பின் முன்னேற்றம் உருவாகிறது என்றும் இது உணவுப் பொருட்களின் விலை குறைப்பு மற்றும் அறுவடை காலத்தில் விவசாய சமூகங்களிடையே மேம்பட்ட வருமானம் ஆகியவை காரணமாக இருக்கலாம் என்று உணவுத் திட்டம் தெரிவிக்கிறது.

இந்த நேர்மறையான போக்கு இருந்தபோதிலும், சில மாவட்டங்களில் குறிப்பாக கிளிநொச்சி, நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்றவற்றில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகமாகவே உள்ளது.

தோட்டத் துறையில் உள்ள தேயிலைத் தோட்டச் சமூகங்களுக்குள்ளும், அன்றாட கூலித் தொழிலாளர்கள் மற்றும் சமுர்த்தி போன்ற சமூக உதவித் திட்டங்களைத் தங்கள் முக்கிய வருமான ஆதாரமாக நம்பியிருக்கும் குடும்பங்கள் மத்தியிலும் மிக உயர்ந்த அளவிலான கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை காணப்பட்டது.

2022 மற்றும் 2023ஆம் ஆண்டு இரண்டு முக்கிய பயிர் பருவங்களில் அரிசி மற்றும் மக்காச்சோளம் உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தி கடந்த ஐந்தாண்டு சராசரியை விட 14 சதவீதம் குறைவாக 4.1 மில்லியன் தொன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சிறு விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் அத்தியாவசிய உரங்கள், பலதரப்பு மற்றும் இருதரப்பு நன்கொடை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நிதி மூலம், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது,

பல பொருட்களின் விலைகள் குறையும்

மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த ஆண்டு நாணய மாற்று வீதம் மற்றும் வெளிநாட்டு நாணயச் சந்தையின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக கடன் கடிதங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட அத்தியாவசியமற்ற/அவசரமற்ற இயல்புடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கு எதிராக 100 சதவீத பண வரம்பு வைப்புத் தேவையை விதித்தது.

நாணயச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட உத்தரவில், 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி மேலும் பல இறக்குமதிகள் மீது 100 சதவீத பண வைப்பு வரம்பை மத்திய வங்கி விதித்த நிலையில், அந்நிய செலாவணி கையிருப்பில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் இரண்டு உத்தரவுகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய தொலைத்தொடர்பு சாதனங்களான அலைபேசிகள் மற்றும் நிலையான தொலைபேசிகள், மின்விசிறிகள், தொலைக்காட்சிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், டிஜிட்டல் கமெராக்கள், மின்வெப்பமாக்கிகள், விளக்குகள் என்பனவற்றின் விலைகள் குறையும் என்று தெரிவிக்கப்படுகிறது

மேலும், ஆடைகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள், பாதணிகள், கைக்கடிகாரங்கள் மற்றும் வீட்டு மற்றும் மரத்தளவாடப் பொருட்கள் மற்றும் அப்பிள்கள், திராட்சைகள், தோடம்பழங்கள், உலர்ந்த பழங்கள் உள்ளிட்ட பழங்கள் வகைகளின் விலைகளும் எதிர்வரும் வாரங்களில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்ப சுட்டெண்...

வெப்ப சுட்டெண் அதிகரிப்பு காரணமாக, போதியளவு நீரை பருகுமாறும் முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வு எடுக்குமாறும் மக்களை நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

வீட்டுக்குள் இருக்கும் வயதானவர்கள் மற்றும் நோயாளிகளை அடிக்கடி பரிசோதிக்குமாறும் குழந்தைகளை நீண்ட நேரம் கவனிக்காமல் வாகனங்களில் விடக்கூடாது என்றும் வெண்ணிற ஆடைகளை அணியுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நீண்ட நேரம் வெயிலில் இருந்தால் சோர்வு மற்றும் வெப்ப பிடிப்பு போன்றவற்றால் பாதிக்கப்படலாம் என்றும் எச்சரித்துள்ளது.

காற்றின் ஓட்டம் குறைந்து வருதல் மற்றும் வளிமண்டலத்தில் அதிகப்படியான ஈரப்பதம் ஆகியவை வெப்பநிலை உயர்வுக்கான காரணங்களாகும் என்பதுடன், அதிக ஈரப்பதம் இருக்கும்போது மனித உடலில் உள்ள வியர்வை வளிமண்டலத்தில் உறிஞ்சப்படுவதில்லை என்பதால் அதிக உஷ்ணம் காரணமாக அசௌகரியம் ஏற்படுகிறது.

பலவீனமடையவில்லை; பலமடைந்துள்ளது

“ஒரு வருடத்துக்கு முன்னர், உப செயலகத்தை திறந்து வைத்தபோது, அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பிரதேச செயலகம் கோரும் நிலையில், உப செயலகம் எதற்கு எனவும் கேள்விகள் எழுப்பட்டன.

அப்போது பிரதேச செலயகம் நிச்சயம் உருவாகும் என நாம் பதிலளித்தோம். அதனை இன்று செய்து முடித்துள்ளோம். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும், சொல்வதை செய்வதும்தான் காங்கிரஸின் அரசியல் பலம்.

இராஜங்க அமைச்சு பதவி எமக்கு கிடைத்தபோது, ஆறுமுகன் தொண்டமானின் மறைவோடு காங்கிரஸ் பலவீனமடைந்துவிட்டது என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நாம் அமைதி காத்தோம். மறைந்த தலைவர் காட்டிய வழியில் நடந்தோம்.

எமது தவிசாளர் தேசிய சபையில் உள்ளார். தலைவர் கிழக்கு மாகாண ஆளுநராக இருக்கின்றார். நான் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சு பதவியை வகிக்கின்றேன். ஆக இருந்ததைவிடவும் காங்கிரஸ் பலமாகவே உள்ளது.

எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றி வருவோம். அடுத்ததாக பல்கலைக்கழக விவகாரத்தையும் செய்து முடிப்போம்” என்றார்.

ஜூன் 1 முதல் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்குச் செல்லாமல் ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இலத்திரனியல் கடவுச்சீட்டை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இக்குழுவில் கலந்துரையாடப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

ஒன்லைன் விசா விண்ணப்பத்தில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அந்த நோக்கத்திற்காக, வெளிநாட்டவர்கள் சிரமமின்றி விசாவைப் பெறுவதற்குத் தேவையான பொறிமுறையை விரைவாகத் தயாரித்து நடைமுறைப்படுத்துமாறும், இலங்கையின் சர்வதேச விமான நிலையங்களின் உள்ளூர் மற்றும் வெளிநாட்டவர்களுக்கான மேலும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதிக வருமானம் ஈட்டும் வகையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்க வேண்டியதன் தேவை குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இதற்கு அவசியமான நடவடிக்கைகளை காலதாமதம் இன்றி மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி, வெளிவிவகார அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் கம்பனி போன்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

ஸ்டாலின் உள்ளிட்ட 32 பேருக்கு ஜூலை 01ஆம் திகதி விசாரணை

குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சுகவீனம் உட்பட சில காரணங்களால் 12 சந்தேகநபர்கள் ஆஜராகவில்லை என்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்தே இந்தத் திகதி அறிவிக்கப்பட்டது.

மேலும், முறைப்பாட்டைத் திருத்தியுள்ளதாகவும், பொது வீதிக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் சட்டவிரோதமான முறையில் ஒன்றுகூடியமைக்காக சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியுள்ளதாகவும் நீதிமன்றில் வெலிக்கடை பொலிஸார் அறிவித்தனர்.

இந்த நிலையில் பத்தரமுல்லையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக ஜோசப் ஸ்டாலின் உட்பட 32 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொவிட் 19 தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறி சட்டவிரோதமாக ஒன்றுகூடியமை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை நோக்கி பயணித்த அம்புலன்ஸுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் வெலிக்கடை பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்,

மத நல்லிணக்க விவகாரம்: தேரருக்கு விளக்கமறியல்

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் அநுராதபுரம் பகுதியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (28) கைது செய்யப்பட்ட அவர், குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இராஜாங்கனை சத்தாரத்ன தேரரால், சமூக ஊடகங்களில் வெளியிடும் கருத்துகளால், மதங்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்பட வாய்ப்புள்ளதாக பாஹியன்கல சாகர தேரரால் குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அதற்கமைய, முறைப்பாட்டை அடுத்து கைதுசெய்யப்பட்ட அவரிடம் குறித்த சம்பவம் தொடர்பான வாக்குமூலங்களை பதிவு செய்த சீஐடியினர் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொழும்பில் ஏலக்காய் திருட்டு

திருடப்பட்ட ஏலக்காய் தொகையின் பெறுமதி 25 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்பலோகம மற்றும் பண்டாரகம பகுதிகளைச் சேர்ந்த 39 வயதுக்கு உட்பட்ட மூவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களால் திருடப்பட்ட ஏலக்காய் தொகை வைக்கப்பட்டிருந்த கொள்கலன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை தொடர்ந்தும் உறுதியாக இருக்கும்

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தேவையான உள் மற்றும் வெளி சமத்துவமின்மைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 350 மில்லியன் அமெரிக்க டொலர் சிறப்புக் கொள்கை அடிப்படையிலான கடனுக்கு திங்கட்கிழமை (29) அனுமதி அளித்ததையும் அவர் வரவேற்றார்.

நிதி நெருக்கடியின் போது அடிப்படை சேவைகளை ஆதரிப்பதற்கும் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய அவசர உதவிகளை இலங்கை பெரிதும் மதிக்கின்றது என்றார்.

குழுக்களை விசாரிக்க விசேட பொலிஸ் பிரிவு

நாட்டின் பல இடங்களில் இருந்தும் இவ்வாறான குழுக்கள் உருவாகி வருவதாகவும், அவர்களின் நடவடிக்கைகள் அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டவை எனவும், தற்செயலான செயற்பாடுகள் அல்ல எனவும் ஜனாதிபதிக்கு கிடைத்த புலனாய்வு தகவலின் பிரகாரம் இந்த துரித முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரிய புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து, பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி அலுவலக பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுக்கு திங்கட்கிழமை (29) பணித்துள்ளார்.

வரலாறு காணாத பாரிய பொருளாதார ஸ்திரமின்மைக்கு நாடு முகம் கொடுத்த போது மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து மக்களிடையே பிளவை ஏற்படுத்தி நாட்டை மீண்டும் வீழ்ச்சியடையச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதிக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற நாசகார செயல்களை கண்காணித்து, மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விஷயங்கள் சமூகத்தை சென்றடையும் முன்பே தடுக்கும் பொறுப்பு புதிதாக நிறுவப்பட்டுள்ள புதிய பொலிஸ் பிரிவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக புதிய பொலிஸ் பிரிவு மிக விரைவில் ஸ்தாபிக்கப்படும் என்றார்.

மத சுதந்திரம் குறித்து சட்டமூலம் வருகிறது

பௌத்த மதம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்தாக குற்றம்சாட்டப்பட்ட நகைச்சுவைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

‘மோடாபிமானய’ என்ற நிகழ்ச்சியில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய ஞாயிற்றுக்கிழமை (28) அதிகாலை கைது செய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் அன்றையதினம் மாலை ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தேரர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவர் விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை, குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களையும் விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தங்கமும் டொலரும் கணிசமாக சரிவு

2022ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298 ரூபாய் 10 சதமாகவும் விற்பனை விலை 308 ரூபாய் 49 சதமாகவும் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.இதேவேளை, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளதாக கொழும்பு, செட்டியார் தெரு வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு பவுண் 22 கரட் தங்கத்தின் விலை 150,800 ரூபாயாகவும் 24 கரட் தங்கம் 163,000 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலை 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விலையிலிருந்து கணிசமாகக் குறைந்துள்ளது.

350 மில். டொலர் வழங்குகிறது ஆசிய அபிவிருத்தி வங்கி

உரம், மருந்துகள், நீர் சுத்திகரிப்புக்கான இரசாயனங்கள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான செயற்பாட்டு மூலதனம் மற்றும் மிகவும் ஏழைகள் மற்றும் பராமரிக்கப்படக்கூடியவர்களுக்கு பணப் பரிமாற்றம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியை ஆதரிப்பதற்காக தற்போதுள்ள 334 மில்லியன் அமெரிக்க டொலரை அவசரகாலத்துக்காக மீண்டும் பயன்படுத்தியது.

பௌத்த தேரர்களை நோக்கியும் சட்டம் பாய வேண்டும்

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:

“போதகர் ஜெரோம், முற்போக்கு பேச்சாளர் நதாஷா ஆகியோரை சுற்றி வளைத்திருக்கும் பொலிஸ், நீதிமன்ற சட்டங்கள், இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குமார்களுக்கு எதிராகவும் பயன்பட வேண்டும். இனிமேல் இந்நாட்டில், சட்டம் ஒருபக்க சார்பாக இருக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் டுவிட்டர் தளங்களுக்கும், தமது டுவிட்டர் செய்தியை மனோ கணேசன் எம்பி இணைத்துள்ளார்.

மாடுகளுக்கு பெரியம்மை: வடமேல் மாகாணத்தில் தடை

இதன் காரணமாக கால்நடைகளுக்கு அதிகமாக பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் ஒரு மாடு பெரியம்மை நோய் தாக்கம் காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்பே இறந்துள்ளது.

இதையடுத்து கால்நடை ஒன்று கடுமையாக பெரியம்மை நோய்த்தாக்கம் காரணமாக உணவின்றி நீர் கூட அருந்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் நாளாந்தம் பெறப்படுகின்ற பாலின் அளவும் குறைந்து காணப்படுவதாகவும் கால்நடைகளை வாழ்வாதாரமாக கொண்டு வாழும் பலர் பாதிக்கப்படுவதாகவும் தற்பொழுது கால்நடைகளுக்கான மருந்து வகைகளும் பலமடங்கு அதிகரித்து காணப்படுவதாகவும் கால்நடைகளை கொள்வனவு செய்து கால்நடை வளர்க்க முடியாத நிலையில் இருப்பதாகவும் கால்நடை பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வலிய கவனம் செலுத்த வேண்டும் என கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரிக்கு

புதிய பதிவாளர்

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரியின் புதிய பதிவாளராக எம். ஜிப்ரி, தனது கடமையை நேற்று (29) பொறுப்பேற்றுக் கொண்டார். கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற புதிய பதிவாளரை வரவேற்கும் நிகழ்வின்போது, கல்லூரியின் நிதி மற்றும் நிர்வாகத்துக்கான உப பீடாதிபதி எம்.சீ. ஜுனைட், முன்னாள் பதிவாளர் ஏ. புஷ்பராஜ், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம். எம் அக்பர் சலீம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(படம்: எம்.ஏ றமீஸ்)

சம்மாந்துறை ஜமாலியா அதிபர் விவகாரம்:

ஏட்டிக்கு போட்டியாக ஆர்ப்பாட்டம்

■ வீரீ சகாதேவராஜா

சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலய அதிபர் விவகாரம் தொடர்பில் இரு தரப்பினர் ஏட்டிக்குப் போட்டியாக வலயக் கல்விப் பணிமனையின் முன்னால் நேற்று (29) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்மாந்துறை பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா மற்றும் அதிகாரிகளோடு பேசிய பின்னர், ஆர்ப்பாட்ட ஸ்தலத்துக்கு வந்து ஆர்ப்பாட்டக்காரர்களோடு கலந்துரையாடினர்.

அதன் பின்னர், இரண்டு கோஷ்டிகள் சார்பிலும் தலா இரண்டு பேரை அழைத்து அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு விடயத்தை தெரிவித்து, இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக பணிப்பாளர் உறுதியளித்ததை அடுத்து, ஆர்ப்பாட்டம் காரர்கள் கலைந்து சென்றார்கள்.

கோவில்களால் இந்து மக்களின் வறுமையை போக்க முடியும்

காரைதீவில் மேலதிக அரச அதிபர் ஜெகதீசன் நம்பிக்கை

■ வீரீ சகாதேவராஜா

வறுமையைக் காரணம் காட்டி இந்து மக்கள் மதம் மாற்றப்படுகின்றார்கள் என்று கூக்குரலிடுகின்றோம். ஏன் இந்து தனவந்தர்களால், இந்து அமைப்புகளால் இந்து மக்களின் வறுமையை, துன்பத்தை போக்குவதற்கு முடியாதா? கோடி கோடியாய் சம்பாதிக்கின்ற ஆலயங்களுக்கு இது முடியாதா என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கேள்வி எழுப்பினார்.

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் அம்பாறை மாவட்ட கிளை, மாவட்டத்தில் உள்ள 360 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தலா 25 கிலோ கிராம் கோதுமை, 25 கிலோ கிராம் அரிசி என்பவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்து ஸ்வயம் சேவக சங்க அம்பாறை மாவட்ட தலைவர் இரா. குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்து மக்களின் வறுமையைப் பயன்படுத்தி, மாற்று மதத்தினர் உதவிகளைச் செய்து மதம் மாற்றி வருகின்றனர். இதனை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்து அமைப்புகள் இணைந்து, இந்த நிலைமையை ஏன் நிவர்த்தி செய்ய முடியாது? அதுபோல கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் பெரிய பெரிய ஆலயங்கள் இந்த இந்து மக்களின் வறுமையைப் ஏன் துடைக்க முடியாது? அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருக்கின்ற பெரிய ஆலயங்கள் சேர்ந்தாலே, இந்து மக்களின் வறுமையை நிச்சயம் போக்க முடியும்.

இறைவன் நேரடியாக வந்து மக்களின் பிரச்சினைகளை, தேவைகளை ஒருபோதும் தீர்த்து வைப்பதில்லை. மாறாக, சில மனிதர்களூடாக, அமைப்புகளூடாக நம்மை போன்றவர்களை கருவியாக பயன்படுத்தியே மக்களின் பிரச்சினைகளை, தேவைகளை தீர்த்து வைக்கின்றார்.

எனவே, அந்த அமைப்பினர் மனிதாபிமானத்துடன் செயற்பட்டு, இந்த மக்களின் வறுமையை போக்க முன்வர வேண்டும் என்றார்.

வாழைச்சேனையில் முதியோர் சங்க காரியாலயம்

■ எச்.எம்.எம் பர்ஸான்

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் உஸ்மான் முதியோர் சங்கத்துக்கான காரியாலயம் வெள்ளிக்கிழமை (26) திறந்து வைக்கப்பட்டது.

முதியோர் சங்க தலைவர் எம்.ஐ.எம் புகாரி தலைமையில் நடைபெற்ற காரியாலய திறப்பு நிகழ்வில், வாழைச்சேனை மத்தி 206 பி கிராம சேவை உத்தியோகத்தர் ஜெஸ்மிலா பானு, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிலோஜினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

புனித சவேரியார் தேவாலய வருடாந்த பெருவிழா

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா புனித பூமியில் அமைந்துள்ள 185 வருடங்கள் தொன்மையான வரலாற்றைக் கொண்ட புனித சவேரியார் தேவாலய வருடாந்த பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றது.

இந்தத் திருவிழாவில் பரிசுத்த மாதாவின் சொரூபம் ஊர்வலமாக எடுத்து வருவது இவ்வருடமும் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேவாலயத்தின் அருட் தந்தை சுதத் ரோஹன பெரேரா, தலைமையில் இடம்பெற்ற விழாவை நிர்வாக சபை, பிரதேசவாசிகள், பக்தர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நடத்தினர். இதில் கண்டி மறை மாவட்ட ஆயர் அருட்தந்தை அய்மன் ஜயசுந்தர ஆண்டகை தலைமையில் விசேட ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

வீட்டை நொருக்கிய காவாலிக் கூட்டம்

■ க. அகரன்

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுளைந்த காவாலிக் கூட்டம் வீட்டை உடைத்து சேதப்பட்டுத்தியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று (29) அதிகாலை உள்நுளைந்த காவாலிக் கூட்டம், வீட்டின் பிரதான வாயிலை உடைத்து சேதப்படுத்தியதுடன், காணிக்குள் சென்று கதவுகள், யன்னல்களை அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

வீட்டில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதுடன் காலையில் வீடு சென்று பார்த்தபோதே, தமது வீடு உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். சம்பவம் தொடர்பில், நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்காணிப்பு கமெராவில் தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் தொடர்பான காட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதன் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உடையார் கட்டில்

குளத்தை ஆக்கிரமிக்கும் தனியார்; மக்கள் எதிர்ப்பு

■ கெ. கீதாஞ்சன்

உடையார்கட்டு கமநல சேவை திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வெள்ளப்பள்ளம் குளம், மக்களுக்கான குடிதண்ணீர், கால்நடைகளுக்கான மேச்சல் மற்றும் தண்ணீர், மீன்பிடி தொழில், நிலத்தடி நீர் மற்றும் மேட்டுநில பயிர்செய்கை என மக்களால் மிகஉச்ச அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு காணப்படும் குளத்தை தனிநபர் ஒருவர் அபகரித்து, எல்லை வேலி நாட்டி அபகரிப்பதால் கிராம மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளார்கள். நேற்று (29) வெள்ளப்பள்ளம் குளப்பகுதியில் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். பதாகைகளை தாங்கியவாறு எதிர்ப்பில் ஈடுபட்டதுடன் நாட்டப்பட்ட தூண்களையும் மக்கள் அகற்றியுள்ளார்கள்.

குளம் ஆக்கிரமிப்பு தொடர்பில், கமக்கார அமைப்பால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு சென்ற மக்கள், பிரதேச செயலாளர் எஸ். ஜெயகாந்திடம் மகஜரும் கையளித்தனர்.

முதற்கட்ட நடவடிக்கையின்படி, குளம் அமைந்துள்ள காணி தனியார் காணியாக காணப்படுகின்றது. குளத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு விவாசாய திணைக்களத்திடம் இருக்கின்றது. மேலதிகமாக என்ன செய்யலாம் என்பது தொடர்பில் அரசாங்க அதிபருடன் கலந்துரையாட உள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

குளத்தை அபகரித்த தனிநபர், குளத்தில் இருந்து தண்ணீரை அப்புறப்படுத்தும் முகமாக, தண்ணீர் வழிந்தோடும் வாய்க்காலை ஆழப்படுத்தி தண்ணீரை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தண்ணீர் ஓடும் பகுதியில் உள்ள வீதியின் பாலத்தையும் உடைத்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கதிர்காம பாதயாத்திரிகர் மாமாங்கத்தில் மரணம்

■ வீரீ சகாதேவராஜா

செல்வச் சந்நதியிலிருந்து கதிர்காம பாதயாத்திரையில் ஈடுபட்டு வந்த யாழ்ப்பாணம் யாத்திரிகர் மாமாங்கத்தில் திடீர் மரணமானார். இச் சம்பவம் நேற்று (29) காலை 6:30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கைதடியைச் சேர்ந்த கே. சிவலிங்கம் (வயது 70) என்பவரே இவ்வாறு மரணமானவர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு மாமாங்கத்தை வந்தடைந்த கதிர்காம பாதயாத்திரை யாத்திரிகர்கள், நேற்று காலை அங்கிருந்து புறப்பட இருந்தசமயம், இந்த மரணம் சம்பவித்திருக்கின்றது.

மட்டக்களப்பு பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரணவிசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் சடலத்தை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக, பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி கூறுகையில், கடந்த ஏழு வருட காலமாக யாத்திரிகர் சிவலிங்கம், எங்களுடன் பயணித்து வருபவர். வழமை போல, மாமாங்க ஆலயத்தில் பஜனை முடித்த பிற்பாடு, பணிஸ் மற்றும் தேநீரை அருந்திவிட்டு, புறப்பட இருந்த சமயம் சிவலிங்கம் துள்ளி குதித்தாடி சந்தோஷத்தில் இருந்தார்.

மறுகணம் அவர் மயக்கமுற்று சரிந்து விழுந்த உடனே, நாங்கள் அம்புலன்ஸுக்கும் 119க்கும் தகவல் கொடுத்தோம். அம்புலன்ஸ் வருவதற்கு இடையில் அவரது உயிர் பிரிந்து விட்டது. எனது பாதயாத்திரை வரலாற்றில், பாதை யாத்திரையின் பொழுது ஒருவர் மரணித்த சம்பவம் இதுவாகத்தான் இருக்கின்றது என்றார்.

"நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுக்கவும்"

■ ஸ்கே.குமார்

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்காக நியாமானதொரு சம்பளத்தை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதி குழுத் தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகனே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

நுவரெலியா காரியாலயத்தில் திங்கட்கிழமை (29) நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒரு நியாயமான, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பளம் அனைத்து தோட்டங்களிலும் வழங்கப்படுவதில்லை. அதேவேளை, செய்து கொள்ளப்பட்ட கூட்டொப்பந்தத்துக்கு எதிராக முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதால், கூட்டு ஒப்பந்தத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை தோட்ட கம்பனிகள் செயற்படுத்துவதில்லை. இதனால் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக வழிநடத்துகின்றன என்றார்.

எனவே, தோட்ட முதலாளிமார் சம்மேளத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தி, நீதிமன்ற வழக்கை வாபஸ் பெறவைத்து கூட்டொப்பந்தம் முறைமையை கொண்டு வந்து தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்சினையைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

புதிய பிரதேச செயலகங்கள் இரண்டு திறந்துவைப்பு

நுவரெலியா மாவட்டத்தில், தலவாக்கலை உப பிரதேச செயலகம், நோர்வூட் உப பிரதேச செயலகம் என்பன பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

புதிய பிரதேச செயலகங்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வுகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் திங்கட்கிழமை (29) நடைபெற்றன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், கிராம, சமூர்த்தி, நலன்புரி ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், கட்சி பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர்.

PRIME COMMERCIAL PROPERTY
FOR SALE OR RENT AT PITAKOTTE
20P in the Junction facing Thalawathugoda Road, 2 storied with showroom and office, parking for 15-30 vehicles, ideal for any Bank, Supermarket Doctor Channel, Pharmacy, Tuition Centre, Bank office, Warehouse, Showroom.
Please Contact: 077 600 6600

மத நல்லிணக்கமும் நிறுவ இருக்கும் விசேட பொலிஸ் பிரிவும்

பல இனங்கள், பல கலாசாரங்களை பின்பற்றுவோர், பல மதங்களைப் பின்பற்றுவோர் வாழும் நாட்டில், மிகப் பிரதானமாக கடைப்பிடிக்க வேண்டியவை 'ஒரே நாடு, ஒரே சட்டம்'. அதில், ஓட்டைகள் இருக்குமாயின் அந்த நாட்டில் நீதியை எதிர்பார்க்க முடியாது; நிலைநாட்டவும் முடியாது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் முக்கியத்துவம், ஏனைய மதங்களுக்கும் வழங்கப்படுகின்றதா என்று பார்த்தோமெனில், பூஜ்ஜியமாகவே இருக்கும்.

அதேபோல, பௌத்த மதத்தை தவிர ஏனைய மதங்களை நிந்திப்போருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளும் ஆமை வேகத்திலேயே நகருகின்றன.

ஆனால், பௌத்த மதத்தை நிந்தித்தால் மட்டும். உடனடியாக சட்டம் இயங்கத்தொடங்கிவிடும். இதனோர் அங்கமாகவே, மத நல்லிணக்கத்தை பாதுகாக்கும் வகையில் விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்படுமென ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

மறுபுறத்தில் கருத்துரைத்துள்ள பௌத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, மத சுத்திரத்தை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டமூலமொன்று கொண்டுவரப்படும் என்கிறார். இவரே, புத்தர் சிலைகளை வைத்துவிட்டு, தொல்பொருள் ஆராய்ச்சியை தொடங்கிவைப்பவர் ஆவார்.

தொல்பொருள் ஆராய்ச்சி முன்னெடுக்கப்படும் இடங்களில், எவ்விதமான மதச்சின்னங்களையும் புதிதாய் கொண்டுபோய் வைத்துவிட்டு, அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுக்கக்கூடாது என்பதே, சகலரினதும் எதிர்பார்ப்பாகும். ஆகையால், புதிய சட்டமூலத்தில் மேற்படி விவகாரம் தொடர்பில் ஆழமாக கவனத்தில் எடுக்கவே வேண்டும்.

பௌத்த மதத்தையும் ஏனைய மதங்களையும் நிந்தித்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ், நாட்டிலிருந்து வெளியேறியிருக்கும் போதகர் ஜெரோம் பெர்ணான்டோவை கைது செய்வதற்கு, பொலிஸார் உஷார் நிலையில் இருக்கின்றனர்.

நகைச்சுவை நடிகை நடாஷா எதிரிசூரிய, ராஜாங்கனை சத்தா ரதன தேரர் இருவரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பௌத்த மதத்தை நிந்தித்தனர் என்ற குற்றச்சாட்டுகளே இவ்விருவருக்கு எதிராகவும் சுமத்தப்பட்டுள்ளன.

ஏதோவொரு தேவைக்காக, குழுவொன்று அல்லது குழுக்கள், மதக் கலவரங்களை உருவாக்க சதி செய்கின்றன என்பது தெட்டத்தெளிவாகின்றது. புத்தர் சிலைகளும் உடைக்கப்படுகின்றன. இனங்களுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும் காயங்கள் இன்றும் ஆறாமல் இருக்கின்றன; விரிசல்களும் நீள்கின்றன.

ஒவ்வொரு மதத்துக்கும் பல சிறப்பம்சங்கள் இருக்கும். இதனிடையே தாங்கள் பின்பற்றும் மதம்தான் பெரியது என்றும் ஏனைய மதங்கள் இழிவானவை என்றும் போதிப்பதை கைவிடவேண்டும். மதங்கள் தொடர்பில் குரோதங்களை விதிக்கக்கூடாது.

மதக் கலவரங்கள் வெடிக்க இடமளிக்கக்கூடாது. மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் குழுக்களை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக விசேட பொலிஸ் பிரிவை நிறுவ வேண்டும். அக்குழு அனைத்து மதங்களின் நல்லிணக்கத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும். அத்துடன் மத சுதந்திரத்துக்கான புதிய சட்டமும் சகல மதங்களுக்கும் உரியவையாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

அடுத்தவரிடம் இருந்து அன்பை, எம்மை அறியாமலே எதிர்பார்க்கின்றோம். தனிமையில் வாடுவது, ஏக்கத்தை ஏற்படுத்தும். வீம்புக்காக எவரிடம் இருந்தும் விலகலாகாது. அது, தனக்குத்தானே வலிகளை உண்டாக்குவது போலாகும்.

நல்ல காலம் வரும் என ஏழைகள், இறைவனிடம் வேண்டி வழிபாடுகளில் ஈடுபடுகின்றார்கள். ஏழைகளை, கடவுள் நிரந்தரமாக துன்பத்தில் வைத்திருக்க மாட்டார்.

நாங்கள், பிறரிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கும் அதேவேளை, எங்களையும் புது மனிதராக்க முயன்றால், நினைத்தவை நிறைவேறும். இயற்கை அதிசயமானது; எதிர்பாராதவற்றை நிகழ்த்திக் கொண்டிருக்கும்.

ஒன்றுமே இல்லாதவர்கள் கோடீஸ்வரர் ஆகின்றார்கள்; தலைவர்களும் ஆகின்றார்கள். ஏற்றம் - தாழ்வு, உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற சுழலில் இருந்து எவரும் தப்பிக்க முடியாது. எவை பற்றியும் யோசிக்காமல், துணிவுடன் செயற்படுவதே, முன்னேற்றத்துக்கு வழியாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம்களின்

பயன்படுத்தப்படாத உலகபலம்

மொஹமட் பாதுஷா

உலகளவில் கணிசமாக முஸ்லிம்கள் வாழ்கின்ற போதிலும், அவர்களின் பிரச்சினைகள் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன், அரபுலகம் அல்லது முஸ்லிம் நாடுகள், உலக முஸ்லிம்களுக்காக முன்னிற்கவில்லை என்பதும் இன்றைய உலக யதார்த்தமாகும்.

இலங்கையில் சுமார் 22 இலட்சம் முஸ்லிம்கள் வாழ்வதாக கூறப்படுகின்ற போதிலும், உத்தியோகபூர்வ புள்ளிவிவர தரவுகள், இன்னும் 20 இலட்சத்தை தாண்டவில்லை எனக் குறிப்பிடுகின்றன.

சிறுபான்மைச் சமூகங்களின் வரலாற்றை, சனத்தொகைப் பரம்பலை, அவர்களின் தியாகங்களை திரிபுபடுத்துவது போல, சனத்தொகைப் பருமனை குறைத்துக் காட்டும் கைங்கரியமும் இடம்பெற்றுக் கொண்டிருப்பது நாடறிந்த இரகசியமே!

இலங்கையில் புள்ளிவிவரத் தரவுகள் இப்படியாக அமைந்தாலும், உலக அரங்கில் முஸ்லிம்களின் பலம் என்பது வேறுவிதமாக அமைந்துள்ளது. குறிப்பாக, உலக முஸ்லிம்களின் சனத்தொகை இரண்டு பில்லியனையும் கடந்துள்ளது.

இஸ்லாம் என்பது உலகளவில் பின்பற்றப்படுகின்ற இரண்டாவது மிகப் பெரிய மதமாகும். இது முதலாவது இடத்துக்கு வந்துவிடும் என்ற பயங்காட்டும் நடவடிக்கைகள், முன்னெடுக்கப்படுகின்றன. 'இஸ்லாமியபோபியா' என்பது, இதனடிப்படையில் உருவேற்றப்பட்ட ஒரு கருத்தியல் எனலாம்.

முஸ்லிம் நாடுகள் என்று வகைப்படுத்தப்பட்ட பிரிவில் 26 நாடுகள் உள்ளன. இவற்றுள் 95 சதவீதத்துக்கும் அதிகமாக முஸ்லிம்கள் வாழும் நாடுகள் கணிசமாக உள்ளன. இவைதவிர, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நாடுகள், சுமார் 50 ஆகும். உலகளவில் ஐந்துக்கு உட்பட்ட நாடுகளைத் தவிர, ஏனைய எல்லா நாடுகளிலும் இஸ்லாம் மதத்தை பின்பற்றும் மக்கள் வாழ்கின்றார்கள்.

இதைப் பார்க்கின்ற போது, உலக அளவில் முஸ்லிம்கள் பலம்பொருந்திய சமூகம் என்று தோன்றினாலும், இன்று வரை உலகெங்கும் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற முஸ்லிம்களுக்காக, இந்தப் பலம் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் கவலைக்குரியது.

இந்துக்கள் அதாவது தமிழர்களும் பல நாடுகளில் வாழ்கின்றார்கள். ஆனால், இந்தியா உள்ளிட்ட ஓரிரு நாடுகளிலேயே இந்து மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஆனால், இன்றைய நிலைவரப்படி தமிழர்களின் ஒற்றுமையும் ஒன்றுதிரண்ட பலமும், உலக அரங்கில் பலம்மிக்கதாக உள்ளதைக் காண்கின்றோம்.

உலகின் மிகப் பிரதான மதமான கிறிஸ்தவத்தை தமது மதமாகக் கொண்டுள்ள மேற்கத்தேய நாடுகளும் அமைப்புகளும், எந்த நாட்டிலாவது கிறிஸ்தவர்களுக்கு ஒரு பிரச்சினை எழும்போது, குரல் கொடுக்கின்றன; தன்னார்வமாக ஒரு நகர்வைச் செய்கின்றன.

அதுபோல, தமிழர்களுக்கு ஒரு சிறிய பிரச்சினை எழுந்தாலும் இந்தியா உடனடியாக களத்துக்கு வருகின்றது. உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அதற்காக குரல் கொடுக்கின்றார்கள். இது தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால், தமிழ் மக்களின் பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுவனவாக அமைகின்றன.

தீர்வுத்திட்டம் பற்றியோ, 13ஆவது திருத்தம் பற்றியோ அல்லது வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றியோ இந்தியா அழுத்தம் கொடுப்பதன் பின்னணியில், தமிழர்களின் மீதான அக்கறை மட்டுமே இருக்கின்றது என்று யாரும் கூற முடியாது. இதற்குப் பின்னால், இந்தியாவுக்கு ஓர் 'அரசியல்' இருக்கின்றது. இந்து சமுத்திரத்தின் இராணுவ, ஆதிக்க நோக்கங்கள், தமிழ் மக்களின் அபிலாஷைகளை விட அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆயினும், அதையெல்லாம் தாண்டி, தமிழர்களுக்காக முன்நிற்பது முக்கியமானது.

ஆனால், இதைவிட எண்ணிக்கையில் அதிக நாடுகள் முஸ்லிம் நாடுகளாக இருந்த போதிலும், இதைவிட அதிகமான சனத்தொகையை முஸ்லிம்கள் கொண்டிருந்த போதிலும், இலங்கை உட்பட எந்த நாட்டில் வாழும் இஸ்லாமிய மக்களின் பிரச்சினைகளும் சர்வதேச அளவில் முக்கியத்துவப் படுத்தப்படவில்லை. ஆதி சரித்திரத்தில் தொடங்கி, இன்று வரை மேற்குலகம் இஸ்லாத்தை மட்டம் தட்டுவதற்கான ஒரு சூட்சும திட்டத்தை கடைப்பிடித்து வருகின்றது. 'இஸ்லாம் பயங்கரவாதத்தை, தீவிரபோக்கை போதிக்கும் சமயம்' என்ற கருத்தியல் கட்டமைக்கப்பட்டு உள்ளது.

இதன்மூலம், 'இஸ்லாமோபோபியா' என்ற இஸ்லாத்துக்கு எதிரான பயங்காட்டல் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு பின்னால் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவர்களின் கூட்டாளிகள் உள்ளடங்கலாக, பல ஐரோப்பிய நாடுகளும் துணைநிற்கின்றன.

அதுமட்டுமன்றி, அமெரிக்காவின் அல்லது மேற்குலக நாடுகளின் அடிவடிருடிகளாக இருக்கின்ற ஆட்சியாளர்களைக் கொண்டு ஆளப்படும் பல முஸ்லிம் நாடுகளும், இதற்கு மறைமுக ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லாம்.

இது இவ்வாறிருக்க, ஆசிய பிராந்தியத்தில் முஸ்லிம்களை அல்லது அவர்களது மார்க்க ரீதியான அடையாளத்தை கட்டுப்படுத்துவதில், பல நாடுகளில் இரு மதக் கோட்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மியான்மர், இலங்கை போன்ற நாடுகளில் ஒரு விதமாகவும், இந்தியாவில் இன்னுமொரு விதமாகவும் முஸ்லிம்களின் சுயம் நசுக்கப்படுவதைக் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம்.

ஆயினும், அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எதிராக, உறுதியான கூட்டு நிலைப்பாட்டை எடுக்க 'வக்கில்லாத' முஸ்லிம் நாடுகள், இலங்கை, இந்தியா, மியான்மர் போன்ற சிறிய நாடுகளில் நடக்கின்ற அநியாயங்களை தட்டிக்கேட்பதற்கும் தயக்கம் காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

முஸ்லிம்களுக்கு என்ன நடந்தாலும், இஸ்லாமிய நாடுகள் பெரும்பாலும் மௌனம் காப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. 'கண்டும் காணாதது போல' இருப்பதற்கு அல்லது, கடைசிக் கட்டத்தில் 'நீலிக் கண்ணீர்' வடிப்பதற்கே, பிரபல முஸ்லிம் நாடுகள் காத்திருப்பதாகச் சொல்லாம்.

பொஸ்னியா, சிரியா, பாலஸ்தீனம், லிபியா, டியுனிசியா, துருக்கி எனப் பல நாடுகளில் 'பயங்கரவாதத்தை ஒழித்தல்', 'நீதியை நிலைநாட்டுதல்' என்ற தோரணையில், அப்பாவி முஸ்லிம்கள் இலட்சக் கணக்கில் கூட்டுப்படைகளால் கொன்று குவிக்கப்பட்ட போது, சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அமீரகம், கட்டார், ஓமான் உள்ளிட்ட கணிசமான முஸ்லிம் நாட்டுத் தலைவர்கள் வாயைத் திறக்கவில்லை.

உலகில் இரகசியமான முறையில் பயங்கரவாதத்தை ஊட்டி வளர்ப்பதும், அதற்கு தீனி கொடுப்பதும் யார் என்று நமக்கும் தெரியும். எவ்வாறிருப்பினும் அது ஒழிக்கப்பட வேண்டியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அப்பாவி மக்களும் சேர்த்து கொல்லப்பட்ட போது, உலக முஸ்லிம்களின் ஒன்று திரண்ட பலம், ஒரு சிறிதளவேனும் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் நமது கவலையாகும்.

அமெரிக்காவுடனும் மேற்கத்தேய நாடுகளுடனும் திரைமறைவு உறவுடன் இருந்த, இப்போது உறவு கொண்டாடுகின்ற அரபுலக ராஜாக்கள், தங்களது பதவியையும் நலன்களையும் இதன்மூலம் தக்கவைத்து, பாதுகாத்துக் கொண்டார்கள்.

முஸ்லிம் விரோத போக்குக்கு எதிராக நெஞ்சை நிமிர்த்திக் கதைத்த தைரியமுள்ள இஸ்லாமிய ஆட்சியாளர்களைப் போல, தம்மையும் அழித்துவிடுவார்களா, நமது நாட்டிலும் ஒரு பயங்கரவாத இயக்கத்தை உட்புகுத்தி நாசமாக்கிவிடுவார்களா என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது.

சரி! பலம்பொருந்திய நாடுகள் விடயத்தில் இவ்வாறு நடந்து கொண்டாலும் இலங்கை போன்ற நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்ற இன, மத ஒடுக்குமுறைகள், உரிமைப் பறிப்புகள் பற்றியாவது முஸ்லிம் நாடுகள் குரல் கொடுத்திருக்கலாம்; அதுவும் நடக்கவில்லை என்பதை அறவே ஜீரணிக்க முடியாது.

குறிப்பாக, இலங்கை எப்போதும் அரபு நாடுகளில் தங்கியிருக்கின்றது; உதவிகளை எதிர்பார்க்கின்றது. அப்படியென்றால், இலங்கை முஸ்லிம்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை எழுந்தால், சற்று இறுக்கிப் பிடித்தாலே, சம்பந்தப்பட்டவர்கள் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வார்கள்.

ஆனால், இனவாத அடக்குமுறை, மத நெருக்கடி தொடக்கம் ஜனாஸா எரிப்பு வரை அது நடக்கவில்லை. கடைசிக் கட்டத்தில் ஓ.ஐ.சி அமைப்பு அறிக்கை விட்டதே தவிர, தனியொரு முஸ்லிம் நாடோ, மன்னரோ காட்டமான அழுத்தங்களை தொடர்ந்து கொடுக்கவில்லை. இலங்கை முஸ்லிம்கள் விடயத்தில், முஸ்லிம் நாடுகள் இவ்விதம் மெத்தனமாகச் செயற்படுவதற்கு, மேலே குறிப்பிட்டவை தவிர, அவர்கள் பக்கத்தில் வேறு பல காரணங்களும் உள்ளன.

மறுபுறத்தில், இந்தப் பலத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு இலங்கை முஸ்லிம் சமூகம் சரியான நகர்வுகளைச் செய்யவில்லை என்பது நமது பக்கத்தில் உள்ள மிகப் பெரிய குறைபாடும், விமர்சனத்துக்கு உரிய விவகாரமும் ஆகும்.

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின் நீண்டகால, குறுங்கால பிரச்சினைகள் என்ன, அவற்றின் ஆழ அகலங்கள் என்ன என்பதை முதலில் முஸ்லிம் தலைவர்களும், எம்.பிக்களும் படித்தறிந்து கொண்டிருக்க வேண்டும். அவற்றை சரியாக ஆவணப்படுத்தி, சர்வதேசத்திடமும் குறிப்பாக முஸ்லிம் நாடுகளிடமும் முன்வைக்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிராக அநியாயங்கள் நடக்கின்ற சந்தர்ப்பத்தில் அரசாங்கம், ஆட்சியாளர்களுக்கு வால்பிடித்துக் கொண்டிருக்காமல், அப் பிரச்சினைகளை பொதுவெளியிலும் உலகுக்கு கேட்கும் வண்ணமும் முன்வைத்திருக்க வேண்டும். கொழும்பிலுள்ள தூதரகங்கள் ஊடாக, அதற்கான அழுத்தத்தை பிரயோகித்திருக்க வேண்டும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் அப்படிச் செய்யாமல், செயற்றிட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், மத அடிப்படையிலான வேலைத்திட்டங்கள், வீதி அபிவிருத்திகள், கட்டட நிர்மாணங்கள், தொழில் வாய்ப்புகள். தேர்தல்கால உதவிகளை முதன்மைப்படுத்திய உறவை, தூதரகங்களுடன் பெரும்பாலும் கொண்டிருந்ததால், ஏற்கெனவே மெத்தனப் போக்குடன் செயற்படும் முஸ்லிம் நாடுகளுக்கு அது சாதகமாகப் போய்விட்டது.

ஆக மொத்தத்தில், இவ்வளவு பலம் இருந்தும், இஸ்லாத்தை பின்பற்றுவோரை கேட்பாரற்ற ஒரு சமூகம்போல மாற்றி இருக்கின்றார்கள் என்றால், அதற்கு கைப்பொம்மைகளான இஸ்லாமிய நாடுகளும் முஸ்லிம் அரசியல்வாதிகளும், முஸ்லிம் பெயர்தாங்கி ஆயுத இயக்கங்களும் முக்கிய காரணம் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

கடிதங்கள்

ரயில் ஆசன முன்பதிவை

கல்முனையில் மீள ஆரம்பிக்கவும்

கடந்த 38 வருடங்களுக்கு முன்னர், மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் ஆசன முன் பதிவு நிலையம் ஒன்று கல்முனையில் இயங்கியது. 1983ஆம் ஆண்டின் பின்னர், கிழக்கில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக, அம்பாறை மாவட்ட மக்கள், கொழும்புக்குச் செல்வதற்காக மட்டக்களப்பு ரயில் நிலையத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொண்டனர். இதன் காரணமாக, கல்முனையில் இயங்கிய மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கான முன் ஆசனப் பதிவு நிலையம் மூடப்பட்டது.

தற்போது, அம்பாறை மாவட்டத்தில் இருந்து அதிகமான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கு மட்டக்களப்பில் இருந்து செல்லும் ரயில் சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ரயில் பயணத்துக்காக ஆசனத்தைப் பதிவு செய்து கொள்வதில், அம்பாறை மாவட்ட மக்கள், குறிப்பாக அரச ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஏனெனில், அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இலவச ரயில் ஆணைச்சீட்டின் மூலம், ரயில் பயணத்துக்கான ஆசனத்தை முன் பதிவு செய்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு ரயில் நிலையத்திற்குச் சென்று, முன் ஆசனப்பதிவை மேற்கொள்ளும் போது, நேர விரயமும் வீண் செலவும் ஏற்படுவதோடு, சில வேளைகளில் ஆசனப் பதிவை மேற்கொள்ள முடியாது, ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டி உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே, இவைகளை கருத்திற் கொண்டு, கல்முனையில் இயங்கி வந்த ரயில் ஆசன முன் பதிவு நிலையத்தை, மீண்டும் கல்முனையில் திறந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

–எம்.எஸ்.எம் ஹனீபா

அஞ்சலியின் 'ஈகை'

இயக்குநர் ராம் இயக்கத்தில் 2007ஆம் ஆண்டு வெளியான 'கற்றது தமிழ்' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர் அஞ்சலி. இவர் நடித்த அங்காடித்தெரு, எங்கேயும் எப்போதும் ஆகிய படங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

தொடர்ந்து கலகலப்பு, மங்காத்தா, ரெட்ட சுழி, தூங்காநகரம், அரவான், சேட்டை, சகலகலா வல்லவன், மாப்ள சிங்கம், இறைவி உள்ளிட்ட பல்வேறு படங்களில் அஞ்சலி நடித்துள்ளார்.

தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளிலும் இதுவரை 49 படங்களில் நடித்து முடித்துள்ள அஞ்சலி தற்போது 50ஆவது படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.

இந்நிலையில் அஞ்சலி நடிக்கும் 50ஆவது படத்தின் தலைப்பு மற்றும் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. 'ஈகை' என்று பெயரிடப்பட்டுள்ள அசோக் வேலாயுதம் இயக்கும் இந்தப் படத்திற்கு ஸ்ரீதர் ஒளிப்பதிவு செய்கிறார். தரண் குமார் இசையமைக்கிறார்.

இந்திய புலமை பரிசில்

மகாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்திய அரசால் 150 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு, கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கல்விப்பிரிவுக்குப் பொறுப்பான முதலாம் செயலாளர் விவேக் குத்தா, கல்வி அமைச்சின் செயலாளர் நிகால் ரணசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

'நிலவின் கர்ப்பங்கள்'

கவிஞர் மனோகரன் சசிப் பிரியன் எழுதிய 'நிலவின் கர்ப்பங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (27) காரைதீவில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை ஆணையாளரும் கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளருமான எந்திரி நடராஜா சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்துகொண்டார்.

முதல் பிரதியை, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொண்டார். நூல் நயவுரைகளை வெல்லாவெளி உதவி பிரதேச செயலாளர் வி. துலாஞ்சனன், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இராகி. இளங்குமுதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டு உரையை, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பொது சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் நடேசன் அகிலனும் வாழ்த்துரைகளை கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி தவநாயகம் மதிவேந்தனும் கவிஞர் வில்லு பாரதி முரளிதரனும் நிகழ்த்தினர்.

வி.ரி சகாதேவராஜா

விரைவில் திரையில் 'சந்திரமுகி 2'

ரஜினிகாந்த், ஜோதிகா, நயன்தாரா நடிப்பில் 2005இல் திரைக்கு வந்து வெற்றி பெற்ற படம் சந்திரமுகி. இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாராகி உள்ளது.

இதில் ராகவா லோரன்ஸ், கங்கனா ரணாவத், வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். முதல் பாகத்தை இயக்கிய பி.வாசு இந்தப் படத்தையும் இயக்கி உள்ளார்.

இந்தப் படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைக்கிறார்.

படப்பிடிப்பு தொடர்பான புகைப்படங்களை அவ்வப்போது சமூக வலைதளங்களில் படக்குழு வெளியிட்டு வந்தது.

இந்த நிலையில் 'சந்திரமுகி 2' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததாக புகைப்படங்கள் வெளியிட்டு நடிகை ராதிகா அறிவித்துள்ளார். மேலும், 'எனக்கு தங்க மோதிரம் மற்றும் விலையுயர்ந்த கடிகாரம் பரிசளித்த முதல் ஹீரோ ராகவா லோரன்ஸ்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பறவைக்காவடி ஊர்வலம்

நுவரெலியா, வலப்பனை பிரதேசத்துக்கு உட்பட்ட இராகலை நகரில் 60 அடி உயர கதிர்வேலாயுத சுவாமி சிலையைக் கொண்டு திகழும் இராகலை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் முதலாவது மஹோற்சவ பெருவிழா (24.05.2023) அன்று ஆலய மணிகோபுர கும்பாபிஷேகம் மற்றும் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

13 நாள்கள் தொடர்ந்து வெகு விமரிசையாக நடைபெறவுள்ள இந்த மஹோற்சவ பெருவிழாவின் மூன்றாம் நாள் உபய விழாவாக, இராகலை நகர் ஐக்கிய சாரதிகள் சங்கம், மற்றும் வாகன உரிமையாளர்கள் சங்கம் ஆகியோர் பறவைக்காவடி ஊர்வலத்தை நடத்தினர்.

இராகலை சென் லொனாட்ஸ் நகரில் இருந்து பறவை காவடிகள் மாலை 04 மணிக்கு புறப்பட்டு, மேள தாளத்துடன் ஊர்வலமாக ஆலயத்தை வந்தடைந்து, விசேட பூசைகள் இடம்பெற்றன.

ஆ. ரமேஸ்.

சுனைனா நடித்துள்ள 'ரெஜினா'

மலையாள இயக்குநர் டோமின் டி சில்வா இயக்கத்தில் உருவாகியுள்ள 'ரெஜினா' படத்தில், சுனைனா கதாநாயகியாக நடித்துள்ளார்.

இப்படத்திற்கு சதீஷ் நாயர் இசையமைத்துள்ளார். பாடல்களை யுகபாரதி, விவேக் வேல்முருகன், விஜயன் வின்சென்ட், இஜாஸ் ஆகியோர் எழுதியுள்ளனர். இந்தப் படத்திற்கு கே. பவன் ஒளிப்பதிவு செய்கிறார்.

தமிழ், மலையாளம் என பல மொழிகளில் வெளியாகவுள்ள இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி கவனம் ஈர்த்தது. இந்த நிலையில் இந்தப் படத்தின் புதிய அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அதன்படி 'ரெஜினா' படத்தின் டீசர் இன்று (30) வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

மீண்டும் வெளியாகும் வேட்டையாடு விளையாடு



கமல் நடிப்பில் கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் வெளியான படம் 'வேட்டையாடு விளையாடு'. இதில் டிஜிபி ராகவன் என்ற கதாப்பாத்திரத்தில் கமல்ஹாசன் நடித்திருந்தார்.

2006ஆம் வெளியான இதில் ஜோதிகா, கமலினி முக்கர்ஜி, பிரகாஷ் ராஜ், டேனியல் பாலாஜி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ரவிவர்மன் ஒளிப்பதிவில் ஹரிஸ் ஜெயராஜ் இசையில் வெளியான இப்படம் அன்றைய சினிமா சூழலில் ரசிகர்களை திரும்பி பார்க்க வைத்தது.

இந்நிலையில் 'வேட்டையாடு விளையாடு' படம் ஜூன் மாதம் திரையரங்குகளில் புதுப்பொலிவுடன் ரீ-ரிலீஸ் ஆகவுள்ளதாக கூறப்படுகிறது. இதனை ரசிகர்கள் இணையத்தில் கொண்டாடி வருகின்றனர்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து

மட்டு. மிக்கேல் கல்லூரி மாணவன் சாதனை

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் தவேந்திரன் மதுஷிகன், 30 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாக்கு நீரிணையை, 13 மணித்தியாலயத்தில் நீந்தி கடந்து, ஞாயிற்றுகக்கிழமை (28) சாதனை படைத்துள்ளார்.

இதனடிப்படையில், தனுஸ்கோடியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் நீந்தத் தொடங்கிய அவர், தொடர்ச்சியாக 14 மணித்தியாலங்கள் நீந்தி, தலைமன்னாரை பிற்பகல் 3.05 மணிக்கு வந்தடைந்தார். புதிய சோழன் உலக நிறுவனம் இவரது சாதனையை அறிவித்து, நினைவு சின்னமும் வழங்கி கௌரவித்தது. இந்நிகழ்வில், கோவிந்தன் கருணாகரம் எம்.பி, மட்டக்களப்பு, மன்னார் அரசாங்க அதிபர்கள், சுரேஸ் பிரேமசந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கனகராசா சரவணன்

ரஹ்மான் – பாவனா இணையும் முதல் படம்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர்களான ரஹ்மான் மற்றும் பாவனா முதன் முறையாக இணைந்து நடிக்கிறார்கள். அறிமுக இயக்குநர் ரியாஸ் மாரத் இயக்கும் இப்படத்தில் பொலிஸ் அதிகாரி வேடத்தில் ரஹ்மான் நடிக்கிறார்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு நடிக்க வந்த பாவனா இதில் தடயவியல் மருத்துவ அதிகாரியாக நடிக்கிறார். ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகும் இப்படத்திற்கு 'துருவங்கள் 16' படத்தின் ஒளிப்பதிவாளர் சுஜித் சாரங் ஒளிப்பதிவு செய்கிறார்.

பெயரிடப்படாத இப்படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு கொச்சியில் தொடங்கியது. இப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு பொள்ளாச்சி, பாண்டிச்சேரி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் ஜூன் மாதத்தில் நடைபெறுகிறது.

கந்தளாயில் விவசாயிகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட விவசாயச் சங்கங்கள் ஒன்றிணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நேற்று (29) முன்னெடுத்தார்கள்.

பேராற்றுவெளி சந்தியிலிருந்து கந்தளாய் மணிக்கூட்டு கோபுரம் வரை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பேரணியாக சென்றார்கள். இதன்போது, 'விவசாயிகளுக்கு நெல்லுக்கான உரிய விலையைத் தா', 'பசளையை மானியமாக வழங்கு', 'உரிய பருவத்தில் நீரினை வழங்கு', 'விவசாயிகளை புறக்கணிக்காதே', 'விவசாயிகளே நாட்டின் செலாவாணி' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் ஏந்தியிருந்தார்கள்.

எப். முபாரக்

ரஜமஹா விகாரையில் நிகழ்வுகள்

வரலாற்று சிறப்புமிக்க மஹியங்கனை ரஜமஹா விகாரையில் புனரமைப்புச் செய்யப்பட்ட தூபியைத் திறந்துவைத்தல், மஹியங்கனை விகாரை வில்லவப்பிட்டி ஏரியின் மையத்தில் அமைந்துள்ள இலங்கையின் மிகப்பெரிய புதிய புத்தர் சிலையைத் திறந்து வைத்தல், மஹியங்கனை வழிபாட்டுத் தலத்தை புனித பூமியாக பதிவு செய்யப்பட்ட சன்னஸ் பத்திரம் கையளித்தல் போன்ற பல நிகழ்வுகள் நேற்றைய (28) தினம் விகாரை வளாகத்தில் இடம்பெற்றன.

துருக்கி

மீண்டும் எர்டோகன்

துருக்கியின் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

அந்நாட்டில் கடந்த பெப்ரவரியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின்போது அரசின் நிவாரணப் பணிகள் மந்தநிலையில் நடைபெற்றதாக எழுந்த அதிருப்தியின் காரணமாக, எர்டோகனுக்கு வெறும் 35.3 சதவீத வாக்குகளே கிடைக்கும் என கருத்துக் கணிப்புகள் வெளியாகின. தேர்தல் முடிவுகள் வெளியானபோது கணிப்புகளைப் பொய்யாக்கி ஜனாதிபதி எர்டோகன் 49.5 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

துருக்கி அரசியலமைப்புச் சட்டப்படி, 50 சதவீத வாக்குகள் பெற்றால்தான் ஜனாதிபதி முடியும் என்பதால், 2-ஆம் கட்ட தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

2-ஆம் கட்ட தேர்தலில் சுமார் 52 சதவீதம் வாக்குகள் பெற்று எர்டோகன் முன்னிலை வகிப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி கூட்டணி வேட்பாளர் கெமால் கிளிச்தாருக்குக் 47 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

வெற்றி உறுதியானதையடுத்து தலைநகர் இஸ்தான்புலில் ஆதரவாளர்களிடையே பேசிய ஜனாதிபதி எர் டோகன், “மேலும் 5 ஆண்டுகளுக்கு நாட்டை ஆளும் பெரும் வாய்ப்பை எனக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

ஆண்டுக்கு 8 கோடி ரூபாய் சம்பாதிக்கும் நாய்

நாய் ஒன்று ஆண்டொன்றுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 28 கோடி ரூபாயை இணையத்தின் மூலமாக சம்பாதித்து வரும் சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

டக்கர் பட்சைன் எனப்படும் 5 வயதான நாய் ஒன்றே இவ்வாறு இணையத்தை கலக்கி வருகின்றது,

கோல்டன் ரிட்ரீவர் இனத்தை சேர்ந்த குறித்த நாயின் பெயரில் அதன் உரிமையாளர் ஒருவர் ஒரு இன்ஸ்டா கிராம் கணக்கொன்றை செயற்படுத்தி வருகின்றார்.

குறித்த இன்டாகிராம் கணக்கில் அந்நாயின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவிட்டு வருகின்றார். இதனை 25 மில்லியன் மக்கள் பின்தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இது குறித்து அந்நாயின் உரிமையாளர் கர்ட்னி பட்சை கூறுகையில், “ஒரு 30 நிமிட யூடியூப் வீடியோவுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 1.8 கோடி வரை வருமானம் கிடைக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா

கழிவறையில் சமையல்; வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி

உணவகமொன்றில் உள்ள கழிவறையில் ஊழியர்கள் சிலர் பிரியாணி அரிசியை அலசிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானாவில் உள்ள பிரபல உணவகமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த உணவகத்திற்கு வழங்கப்படும் தண்ணீர் விநியோகம் தடைப்பட்டமையாலேயே கழிவறையில் பிரயாணி அரிசியை அலச நேரிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த வாடிக்கையாளர் ஒருவர் இதனை வீடியோ எடுத்து இணையத்தில் பதிவிடவே குறித்த வீடியோ வைரலாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

2,500 பட்டதாரி மாணவர்களுக்கு அதிஷ்டம்

2,500 பட்டதாரி மாணவர்களுக்கு செல்வந்தர் ஒருவர் தலா 1,000 அமெரிக்க டொலரை பரிசாக வழங்கிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில் பாஸ்டன் நகரில்அண்மையில் நடைபெற்ற மசாசூசெட்ஸ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பட்டமளிப்பு விழாவில், Granite Communications நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ரொபர்ட் ஹேல் பங்கேற்று, சிறப்புரையாற்றி, பட்டம் பெற்ற மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

தொடர்ந்து, பட்டதாரி மாணவர்களுக்கு தலா 500 டொலர் கொண்ட இரு உறைகளை பரிசாக வழங்கினார்.

அவற்றில் ஒன்றில் ‘Gift‘ என்றும், மற்றொன்றில் ‘Give ‘என்றும் எழுதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏலத்தில் திப்பு சுல்தானின் வாள்

மன்னர் திப்பு சுல்தான் போர்களில் பயன்படுத்திய வாள் 140 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டில் மைசூரை ஆண்டவர் மன்னர் திப்பு சுல்தான். 1782 ஆம் ஆண்டு முதல் 12 ஆண்டுகள் அவர் மன்னராக ஆட்சி புரிந்தார்.

இவர் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மிகக் கடுமையாகப் போராடினார். அதோடு மராட்டியர்களோடும் பல போர்களைப் புரிந்துள்ளார். இந்தப் போர்களில் எல்லாம் இவருக்கும் பெரும் வெற்றியை தேடித்தந்த வாளே தற்போது 140 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் பிளேடு வகையைச் சேர்ந்த குறித்த வாள் திப்புசுல்தானின் மறைவுக்குப் பின்னர் பிரித்தானியாவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் டேவிட்

பேர்ட் என்பவருக்கு அவரது வீரத்தை பாராட்டி பரிசாக வழங்கப்பட்டது.

அந்த வாளை இலண்டனைச் சேர்ந்த போன்ஹாம்ஸ் என்ற ஏல நிறுவனம் கடந்த செவ்வாய் கிழமையன்று ஏலம் விட்டது.

ஏலத்தில் தொலைபேசி வாயிலாக கலந்து கொண்ட நபரொருவரே அந்த வாளை 140 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்துள்ளார்.

ஏலம் எடுத்தவர் யார் என்ற விவரத்தை வெளியிட மறுத்த ஏல நிறுவனம், தாங்கள் நிர்ணயித்ததை விட ஏழு மடங்கு அதிக தொகைக்கு இந்த வாள் ஏலம் போய் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அசாம்

கொடூர விபத்தில் சிக்கி 7 மாணவர்கள் உயிரிழப்பு

வீதி விபத்தில் சிக்கி ஏழு மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் அசாம் மாநிலத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அசாம் மாநிலம் கவுகாத்தியில் உள்ள ஜலுக்பரி பகுதியில் நேற்று முன்தினம் குறித்த மாணவர்கள் செலுத்திச் சென்ற கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த வான் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் காரில் பயணித்த 7 மாணவர்களும்

சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும்,மேலும் சிலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

பிறென்போர்ட்டிடம் தோற்ற நடப்புச் சம்பியன்கள்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறென்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

இதேவேளை, சௌதாம்டனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 4-4 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற நியூகாஸ்டில் யுனைட்டெட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

பிரேஸிலின் தலைமை பயிற்றுவிப்பாளராக அன்சிலோட்டி?

பிரேஸில் சர்வதேச கால்பந்தாட்ட அணியின் அடுத்த தலைமைப் பயிற்றுவிப்பாளராவதற்கு ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முகாமையாளர் கார்லோ அன்சிலோட்டி இணங்குவார் என பிரேஸில் இன்னும் நம்பிக்கையுடன் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

மட்ரிட்டுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை அன்சிலோட்டி கொண்டிருக்கின்ற நிலையில், லா லிகா பட்டத்தை இம்முறை கைப்பற்றாததுடன், சம்பியன்ஸ் லீக்கிலிருந்து மட்ரிட் வெளியேறியுள்ளபோதும் அவர் இதுவரையில் நீக்கப்படாததுடன், அடுத்த பருவகாலத்திலும் தொடர அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்

ஜுவென்டஸை வென்ற ஏ.சி மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் வென்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஒலிவியர் ஜிரூட் பெற்றிருந்தார்.

இந்நிலையில், பொலொக்னாவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான நாப்போலி சமப்படுத்தியது.

ஈஸ்டர்ன் றோயல்ஸின் சீருடை வெளியீடு

காரைதீவு சகா

கல்முனை கே.பி.எல் கிண்ணத் தொடரில் கலந்து கொள்ளும் ஈஸ்டர்ன் றோயல்ஸ் அணியின் புதிய சீருடை வெளியீட்டு நிகழ்வுவானது கல்முனையில் அண்மையில் நடைபெற்றது.

மாபெரும் கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டி 2023

அக்கரைப்பற்று ஏஸ் கழகம் நடத்தும் மர்ஹூம் என்.ரி பாறூக் (கீப்பர் பாறூக்) மாபெரும் கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டி 2023 அக்கரைப்பற்று பொதுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

கால்பந்தாட்ட சம்மேளன பிரதித் தலைவராக கடமையாற்றியவரும், சிறந்த கோல் காப்பாளருமான அக்கரைப்பற்றைச் சேர்ந்த மர்ஹூம் என். ரி பாறூக்கின் ஞாபகார்த்தமாக, அணிக்கு 11 பேர் கொண்ட, 16 கழகங்கள் பங்கு கொள்ளும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஜூன் மாதம் அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது.

கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் அணியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்படும் அணிக்கு 50ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 30ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படுவதுடன், ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன், சிறந்த கோல் காப்பாளர் போன்றோருக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

பொத்துவில் தொடக்கம் ஓட்டமாவடி வரையுள்ள கால்பந்தாட்ட கழகங்கங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும். விண்ணப்பங்களை அக்கரைப்பற்று, 2பிரதான வீதியில் அமைந்துள்ள ஏஸ் கழகத்தின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, ஏஸ் கழகம், பிரதான வீதி, அக்கரைப்பற்று எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு 0771273038, 0776287206, 0758217414 எனும் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 30 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.